செ.வெ. எண்:64

நாள்: 31.10.2017

# பத்திரிக்கை செய்தி

## உதகமண்டலம், மாவட்ட நீதிமன்றத்தில் வேலை வாய்ப்பிற்கான

## நேர்முகத்தேர்வு அறிவிப்பு

உதகமண்டலம் நீலகிரி மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 01.06.2016ம் தேதியிட்ட வேலைவாய்ப்பு அறிக்கை மூலம் இரவுக் காவலர், மசால்ஜி மற்றும் இரவுக்காவலர்/மசால்ஜி ஆகிய காலி பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் இம்மாவட்ட நீதிமன்ற இணையதள முகவரி மூலமும் தினசரி நாளிதழ் மூலமும் வரவேற்கப்பட்டன.

மேற்கண்ட பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன, மேற்படி பதவிகளுக்கான இன சுழற்சி வரிசை எண்.4 முதல் 12 வரைக்காக ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு நேர்முகத்தேர்வு **இரண்டாம் சுற்று** வருகின்ற **05.11.2017 (ஞாயிற்றுக்கிழமை)** அன்று நடைபெற உள்ளது. அன்றைய தினம் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களின் பெயர்கள் **ecourts.gov.in/nilgiris/nilgiris-district-** என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் **05.11.2017 அன்று நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு** காலை **09.30** மணிக்கு **அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலத்தில்** உரிய அசல் சான்றிதழ் மற்றும் ஆவணங்களுடன் ஆஜராகுமாறு இந்த அறிவிப்பின் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

/உத்தரவுப்படி/

மாவட்ட முதன்மை அதிகாரி,
மாவட்ட நீதிமன்றம்,
உதகமண்டலம், நீலகிரிமாவட்டம்.